1984 பிப்ரவரி 22]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியிலே ஏதாவது பிரச்சினைகள் இருக்குமேயானால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் உதவிப் பணம்

*128 வினா எண் 16837-திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகள் எத்தனை பேருக்கு உதவிப்பணம் வழங்கப்படுகிறது ?

(ஆ) இதனால் ஆண்டிற்கு அரசிற்கு ஏற்படும் செலவு என்ன ?

(இ) உதவித் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) 1982 டிசம்பர் மாதம் வரை, 325 தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

(ஆ) இந்தத் திட்டத்தால் ஆண்டுக்கு அரசுக்கு ஏற்படும் செலவு விவரம் வருமாறு :

1980 ..	93,600	முந்தைய ஆண்டுகளில் வேலை வாய்ப்பற்றோர் நிவாரனம் அனுமதி அளிக்கப்பட்ட நபர்களுக்காகும் செலவும் உள்ளடங்கும்.
1981 ..	1,72,200	
1982-83 ..	1,95,000	

(இ) இது குறித்து செயல் குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேலை இல்லாத பட்டதாரி வாலிபர்கள், டிப்ளமா பெற்றவர்கள், இவர்களுக்கெல்லாம் தமிழ்நாடு முழுவதும், தமிழக அரசு உதவித் தொகை வழங்குகிறது. இதுவரையில் தமிழ்நாடு பூராவும் அளிக்கப்பட்ட உதவித் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். **விஜயசாரதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் தகுதி வாய்ந்தவர்களில் 7 பிரிவுகளைச் சார்ந்த பட்டதாரிகளுக்கும் டிப்ளமா பெற்றவர்க்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. என்னிடத்தில் இருக்கின்ற குறிப்பின் அடிப்படையில், 1980 ஆம் ஆண்டு முதல் 1983 ஜனவரி முடிய, அரசு இதற்காக ஏறத்தாழ ரூ. 150·56 இலட்சம் நிவாரணம் அளித்திருக்கிறது.

திரு. சு. **முத்துக்கிருஷ்ணன்** : தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையை மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் தான் கொடுக்கின்ற நிலைமை இப்போது உத்தரவில் இருக்கிறது. ஆனால் வேலை இல்லாத பட்டதாரி வாலிபர்களுக்கு இந்த மூன்று ஆண்டுகளுக்குள்ளாக வேலை கிடைக்காமல் இருந்தாலும், வேலை கிடைக்கும் வரையில், மேலும் இந்த உதவித் தொகையை இந்த அரசு தொடர்ந்து அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். **விஜயசாரதி** : பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய உதவித் தொகையை தமிழகத்திலே மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களிலும் தந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அவர்களுக்கு பலவிதமான சலுகைகள்— உதாரணத்திற்கு, பெற்றோரின் ஆண்டு வருமானம் பொறுத்த வரையிலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், ரூ. 24,000 ஆக இருக்க வேண்டும் என்று இதுவரை எந்த மாநிலத்திலும் கொடுக்காத அளவிற்கு தமிழ்நாடு கொடுத்திருக்கிறது. கொடுக்கின்ற கால அளவைப் பொறுத்த வரையில் எல்லா மாநிலங்களும் ஒரே கால அளவைத்தான் நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய மாநிலத்திலே 3 ஆண்டுகள் என்ற குறியீட்டை நிர்ணயித்திருக்கிறோம். எனவே அதனை நீட்டிப்பதற்கு தற்போது அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. இரெ. **இராசமாணிக்கம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-83 ஆம் ஆண்டு வரை 325 தமிழ் படித்துப் பட்டம் பெற்ற வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மூன்று ஆண்டுகளில் உதவித் தொகை கோரி மனு செய்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். **விஜயசாரதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் வேலை இல்லாத தமிழ் பட்டதாரிகள் 1,141 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் நிவாரணம் பெறத் தகுதி பெற்றவர்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டவர்கள் 1,141 பேர்கள். இவர்களில் 524 நபர்கள் மட்டும் வேலையற்றோர் நிவாரணத்திற்காக விண்ணப்பித்தார்கள். இவர்களில் பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு

1984 பிப்ரவரி 22]

அதிகாரிகளால், அதற்கான விண்ணப்பங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. வட்டாட்சியர் ஆய்வு செய்ததற்குப் பின்னர், 325 விண்ணப்பங்களை அனுமதித்திருக்கிறார்கள். 54 விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டன. 145 விண்ணப்பங்கள் இன்னும் பல்வேறு காரணங்களுக்காகப் பரிசீலனையில் பல்வேறு கட்டங் களில் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பட்டதாரிகளுக்கு உதவித் தொகை என்று ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய் அளவில் அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். தற்போது ரேசன் கார்டுகளுக்காக கணக்கெடுப் பதற்கும், அவைகளை விநியோகிப்பதற்கும் மற்றும் உள்ள பணிகளை அரசாங்க ஊழியர்களே செய்து வருகிறார்கள். அது மட்டுமல்லாமல், பல்வேறு அரசு அலுவலகங்களில் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. எனவே இந்த வேலையில்லா பட்டதாரி களை, அரசு அலுவலகங்களில் பயன்படுத்தி, ஏற்கனவே இருக்கும் வேலைப் பளுவை குறைக்கும் வகையில் அவர்களைப் பயன்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையைப் பெறுகின்றவர் களைப் பொறுத்தவரையில் பயன்பெறுபவர்களுடைய மாத வருமானம் 50 ரூபாய்க்கு உள்ளாக இருக்கவேண்டும் என்று நாம் நிர்ணயித்து இருக்கிறோம். அதற்குள்ளாக வருமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு பரிசீலிக்கும்.

சட்டமன்ற LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS

முதுகுளத்தூரில் ஆதி திராவிட மாணவியர் விடுதி துவக்குவதற்கான கோரிக்கை

*129—வினா எண் 17393—திரு. க. பாரமலை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு ஒரு ஹாஸ்டல் திறக்க வேண்டுமென அப் பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?